***IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.***

***DATE : 24.03.2026***

Case No. : OS.12/2024

Deposition of Witness for Plaintiff : PW.1

Name : செல்வி, க/பெ. கோவிந்தராஜி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 11.49.A.M.)**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் விவசாய கூலி வேலை செய்து வருகின்றேன். எனது கணவரும் கூலி வேலை செய்து வருகின்றார். நான் எவ்வளவு வருடமாக ஏற்காட்டில் உள்ளேன் என்றால் சுமார் 26 வருடங்களாக உள்ளேன். எனக்கும், எனது கணவருக்கும் பூர்வீகம் என்னவென்றால் டேனீஷ்பேட்டை அருகில் காடையாம்பட்டி ஆகும். திருமணம் முடிந்த பின்னர் ஏற்காட்டில் வசித்து வருகின்றோம். ஏற்காட்டில் இடம் வாங்கி வீடு கட்டி குடியிருக்கின்றேன் என்றால் சரிதான். போட்டுக்காடு கிராமத்தில் உள்ள எனது வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். குப்புசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை தான் போட்டுக்காடு கிராமத்தில் நான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

2. மேற்படி இடமானது கிராம நத்த புறம்போக்கு இடம் என்றால் சரிதான். இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் போட்டுக்காடு கிராமத்தில் கட்டிக்கொண்டிருந்த எனது வீட்டை இடித்த காரணத்தினால் அதனை நிறுத்தவேண்டி இந்த வழக்கினை தாக்கல் செய்தேன். வீடு கட்டியதாக சொல்லப்படும் இடத்திற்கு உரிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வீடு கட்டியதாக சொல்லப்படும் இடத்திற்கு கிராம நிர்வாக அலுவலரிடமோ அல்லது வருவாய்

அலுவலர்களிடமோ மேற்படி இடத்தின் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டிக்கொள்வதாக அனுமதி பெற்றேனா என்றால் இல்லை.

3. பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான இடத்தை இடித்து விட்டதாக புகார் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி புகாரினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி புகாரினை யாரிடம் கொடுத்தேன் என்றால் ஏற்காடு போலீசாருக்கும், முதல்வர் தனிபிரிவிற்கும் கொடுத்துள்ளேன். மேற்படி புகார் சம்மந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு சொந்தமான இடத்தை பிரதிவாதிகள் இடித்திருந்தால் போலீசார் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும், அவ்வாறு சம்பவமே நடைபெறதா காரணத்தினால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புகார்கள் அனைத்தும் நான் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னதை தட்டச்சு செய்தனர் அதில் நான் கையெழுத்து செய்தேன். வட்டாட்சியரிடம் கொடுத்த புகாரில் எனக்கு சொந்தமான இடத்தை பிரதிவாதிகள் இடித்துவிட்டனர் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணமானது எனது வீட்டிற்குரியது என்றால் சரிதான், அருகிலுள்ள சுந்தரம் என்பவருடையது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.6 ஆவணமானது முத்துமணி என்பவரின் வீட்டு வரி ரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணமானது எனதல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணமானது எனக்கு சொந்தமானதல்ல என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வருவாய் ஆவணங்கள் மற்றும் மின் இணைப்பு ஆவணங்கள் போட்டுக்காடு கிராமம், தலைச்சோலை பஞ்சாத்தில் உள்ள நபர்களின் ஆவணங்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தான எனது வீடு கட்டி இடிக்கப்பட்டுள்ள இடமானது 6.75 செண்ட் நிலம் அரசு புறம்போக்கு

நிலம் என்றால் சரிதான். மேற்படி அரசு புறம்போக்கு நிலத்தில் எத்தனை வருடமாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சுமார் 10 வருடமாக குடியிருந்து வருகின்றனர்.

6. அரசு புறம்போக்கு நிலத்தில் எனது கிராமத்தில் வீடு இல்லாத மக்கள் மட்டுமே அங்கு வீடு கட்டி குடியிருப்பார்கள் என்றும், வேறு நபர்கள் அங்கு வீடு கட்ட முடியாது என்றால் சரிதான். வீடு இல்லாத மக்கள் கிராம பஞ்சாயத்தில் சொல்லி பின்னர் அனுமதி பெற்றுதான் வீடு கட்டுவார்களா என்றால் அதுபற்றி தெரியாது, அங்கு இடம் இருந்ததால் நான் வீடு கட்ட ஆரம்பித்தேன். நான் வீடு கட்ட ஆரம்பித்த இடத்தை 10 வருடங்களுக்கு முன்பு யார் அனுபவத்தில் இருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். 6.75 செண்ட் நிலமானது ஜம் என்ற கிரேணைட் நிறுவனம் அதன் கழிவுகளை கொண்டி அவர்களது அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், அதற்கு அவர்கள் கந்தாய ரசீது செலுத்தி வருகிறார்கள் என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. பிரமாண பத்திரத்தில் பாறை புறம்போக்கு நிலத்தில் பஞ்சாயத்தார் அனுமதியுடன் லின்டல் வரை வீடு கட்டியுள்ளேன் என சொல்லியுள்ள சங்கதிக்கு ஆதரவாக பஞ்சாயத்தார் அனுமதியளித்த ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் எனது வீட்டை தடுத்து நிறுத்தி இடித்தனர் என்ற சங்கதி பொய் என்றும், வருவாய் அலுவலர்களே இவ்வழக்கு சொத்தானது பொது காரியத்திற்காக பயன்படுத்துவதற்காக அவர்களே வீடினை கட்டக்கூடாது என்று தடுத்தனர் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் தான் தடுத்தனர். அரசிற்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி கேட்பதற்கும், அதனை இடித்தற்கு பரிகாரம் கேட்பதற்கும் உரிய வழக்கில் அரசினையம் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு இந்த வழக்கில் சேர்க்காமல் 3-ம் தரப்பினரை சேர்த்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள வெள்ளையன் குமாரர்

சுந்தரம், வெள்ளைய தேவன் மனைவி முத்துமணி, மொய்யாகவுண்டர் குமாரர் ராமசந்திரன் ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சித்தேஸ்வரன் மற்றும் அவரது அடியாட்கள் வெங்கட்டன், பாக்கியராஜ், வேலு, சொரக்காபட்டி அண்ணாமலை, கேளையூர் அண்ணாமலை, மாதையன் ஆகிய 6 பேர் சேர்ந்து எனது வீட்டின் முன் பகுதியையும், பின் பகுதியையும் இடித்துவிட்டார்கள் என்றால் சரிதான். திமுக கவுன்சிலர் வழக்கில் முதல் பிரதிவாதியும் அவரது கணவரும் சேர்ந்து சர்வே எண். 15/1D–ல் 1.50 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 6 நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

9. வீட்டை இடித்ததாக மேற்குறிப்பிட்ட 6 நபர்களின் மீது மட்டும் தான் வழக்கினை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், அதற்கு மாறாக பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள காரணத்தினால் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், 05.07.2021–ம் தேதியன்று ஊர் பொதுமக்கள் சார்பாக காவல் நிலையத்தில் என் மீது நில ஆக்கிரமிப்பு சம்மந்தமாக புகார் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது வரை போட்டுக்காட்டில் குடியிருந்து வருகின்றேன் என்றால் சரிதான். அங்குள்ள நபர்களிடம் பழகியும், அங்குள்ள கடையில் பொருட்கள் வாங்கியும் வருகின்றேன் என்றால் சரிதான், என்னிடம் பிரதிவாதிகள் மேற்படி வீட்டின் பிரச்சனையின் காரணமாக கோவில் வரியினை வாங்காமல் என்னை ஊரைவிட்டு ஒதுக்கி வைப்பதாக சொன்னார்கள்.

10. ஊரைவிட்டு ஒதுக்கி வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், மேற்படி ஊரின் நபர்களிடமும் அங்குள்ள கடையில் பொருட்களை வாங்கியும் வருகின்றேன் எனவும், பொய்யாக சங்கதியினை சொல்லி வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 12.04.2022–ம் தேதியன்று கொடுத்த புகாரினை நான் கொடுக்கவில்லை என்றும், ஊர் பொதுமக்களான குப்பன்,

வெள்ளையதேவன், சுந்தரம், விஜயஆனந்த், கோபி, மாணிக்கம், கோவிந்தராசு ஆகியோர் முதல்வர் தனிப்பிரிவிற்கு அனுப்பிய பொய்யான புகாரினையே வழக்கில் வா.சா.ஆ.3 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அதில் எனது கணவர் கோவிந்தராஜின் பெயரும் உள்ளது. மேற்படி புகாரின் சம்மந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்திலும், காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்களா என்றால் சம்பவ இடத்திற்கே வந்து விசாரணை செய்தார்கள். என்னிடமும் விசாரணை செய்தார்கள் ஊர் பொதுமக்களிடமும் விசாரணை செய்தார்கள்.

11. மேற்படி விசாரணையின் முடிவில் பொய்யான புகாரினை கொடுத்துள்ளோம் என விசாரணையினை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த நபர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பொய்யான புகார் என்பதால் விசாரணை செய்து நடவடிக்கையை நிறுத்திவிட்டனர் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள விசாரணையானது வட்டாட்சியர் அலுவலகத்தில் ஊர் பொதுமக்களிடம் விசாரணை செய்யப்பட்டபோது எடுக்கப்பட்டது என்றால் சரிதான், **அந்த 2 புகைப்படமானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது 22.06.2025–ம் தேதியன்று 1–ம் பிரதிவாதியும் நானும் சேர்ந்து குழு புகைப்படம் எடுத்துக்கொண்டது என்றால் சரிதான், மகளிர் குழுவிற்காக மேற்படி புகைப்படம் எடுக்கப்பட்டது. **அந்த புகைப்படமானது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

12. பாறை புறம்போக்கு நிலத்தினை மற்ற நபர்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கானது இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. போட்டுக்காடு கிராமத்தில் சர்வே எண்.18/7–ல் 900 சதுரடியில் வீடு உள்ளது என்றால் சரிதான். உரிமையும், பாத்தியம் இல்லாத இடத்திற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியதற்கு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், உரிய நபர்களை தரப்பினர்களாக

சேர்க்காமல் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும், அரசிற்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.49.P.M.)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.24 12:50:29 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.